


31ஆவது ஆண்டில்
# விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com




நதி: 31 | பாலம்: 14 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | July 15, 2021

## கனடிய ஆளுநராக முதற்குடி சமூகத்தவர்!

கனடிய ஆளுநராக முதற்தடவையாக Inuit மக்களின் தலைவரும், CBC வடக்கு ஊடகத்தில் 1970இல் ஒலிபரப்பாளராகவும், பின்னர் அரச அதிகாரியாகவும் பணி யாற்றிய இராஜதந்திரியான Mary Simon பதவியேற்கவுள்ளார்.

2021 யூலை 6ஆம் திகதி ஒட்டாவா நகரில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கனடியப் பிரதமர் ஜஸ்ரின் ரூடோ கனடிய ஆளுனர் பதவிக்குத் தனது தெரிவான தேசிய Inuit மக்களின் அமைப்பான Inuit Tapiriit Kanatamiஇனுடைய முன்னாள் தலைவரான Mary Simonஐ கனடாவிற்கான தனது பிரதிநிதியாக எலிசபெத் மகாராணியார் ஏற்றுக் கொண்டுள்ளார் என அறிவித்தார்.

கனடாவின் 30ஆவது ஆளுநராக 2021 யூலை 26இல் பதவி ஏற்கப் போகும் Mary Simon ஐந்தாவது பெண் ஆளுநர். ஆனால் இவரே முதலாவது கனடாவின் முதற்குடி மக்களின் பிரதிநிதி என்பது குறிப்பிடத்தக்கது.

கனடியப் பிரதமரால் Mary Simon ஆளுனர் பதவிக்குத் தெரிவு செய்யப் பட்டுள்ளார் என அறிவிக்கப்பட்டவுடன் குவிபெக் மாகாணத்திலுள்ள, கற்றினோ என்ற இடத்திலுள்ள கனடிய வரலாற்று அருங்காட்சியகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் தெரிவிக்கையில் "எனது நியமனம் கனடாவிற்கு ஒரு வரலாற்று நிகழ்வும், ஊக்கமளிக்கும் (inspiration) தருணமும் ஆகும். நல்லிணக்கத்தை நோக்கிய நீண்ட பாதையில் இது ஒரு முக்கியமான படியாகும் என்று நம்பிக் கையுடன் நான் சொல்ல முடியும்" என்றார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் "எனது நியமனம் கனடாவின் முதற்குடி மக்களு டன் பகிரப்பட்ட வரலாற்றின் மிகச் சக்தி வாய்ந்த மாற்றங்கள் ஏற்படக்கூடிய மிக முக்கியமான காலகட்டத்தில் வருகிறது" எனக் கூறினார்.

Mary Jeannie May Simon குவிபெக் மாகாணத்தின் வடகிழக்குப் பகுதியில் உள்ள Nunavik பகுதியில் இருக்கும் Ungava குடாவின் அருகில் உள்ள Kangiqsualujjuaq என்னும் சிறிய கிராமத்தில் 1947 ஓகஸ்ற் 21இல் பிறந்தார். இவரின் தகப்பனார் Bob Mardon May ஒரு வெள்ளை இனத்தைச் சேர்ந்த ஆங்கிலேயக் கனடியன் ஆவார். அவர் Hudson's Bay நிறுவனத்தின் புறக்காவல் நிலையத்தில் கம்பளிமயிர் வர்த்தகத்துறை யில் முகாமையாளராகப் பணியாற்றினார். இவரின் தாயார் Nancy May ஒரு Inuit சமூகத்தைச் சேர்ந்தவர். Mary Simon இவர்களின் 8 பிள்ளைகளில் இரண்டாவ தாகப் பிறந்தவர். இவருக்கு மூன்று சகோதரிகளும் நான்கு சகோதரர்களும்



இருக்கின்றனர்.

Mary Simon தனது ஆரம்பக் கல்வியை Kuujjuaq மத்திய அரசின் நாள் பள்ளிக்கூடத்திலும், உயர்கல்வியை Nunavik பிரதேசத்திலுள்ள Fort Carson உயர் பாடசாலையிலும் கற்றார். அதன் பின்னர் 1970களில் CBC வடக்கு ஊடக சேவையில் ஒலிபரப்பாளராகப் பணியாற்றி னார். இவர் Inuit மக்களின் மொழியான Inuktitutஐயும் ஆங்கிலத்தையும் நன்றாகக் கற்றுள்ளார். அத்துடன் இவ் இரு மொழிகளிலும் சரளமாக உரையாடக் கூடியவர்.

ஆளுநராக Mary Simon தெரிவு செய்யப்பட்டுள்ளார் என அறிவிக்கப்பட்டவு டன் ஊடகச் சந்திப்பில் அவர் உரை யாற்றும்போது தனது உரையை முதலில் Inuktitutஇல் ஆரம்பித்துப் பின்னர் ஆங்கிலத்தில் தொடர்ந்தார். அவர் பிரெஞ்சு மொழியில் தேர்ச்சி பெறாதது குறித்து ஊடகவியலாளர் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில் Mary Simon, தான் படித்த பள்ளிக்கூடங்களில் பிரெஞ்சு மொழி கற்பிக்கப்படவில்லை எனவும் தான் ஆளுநர் பதவி வகிக்கும் போது நிச்சயமாகப் பிரெஞ்சு மொழி கற்றுக் கொள்வேன் எனவும் கூறினார்.

Mary Simon தனது உரையை Inuit மக்களின் Inuktitut மொழியில் ஆரம் பித்தது குறித்து கருத்துத் தெரிவித்த Inuit Tapiriit Kanatami அமைப்பின் தற்போதைய தலைவரான Natan Obed "இந்நாட்டின் சொந்தக் குடிமக்களான Inuit, Metis மற்றும் முதற் குடிமக்களுக்கு நீண்ட கால மாகப் பல தடைகள் இருந்தன. அவர் களது சொந்த மொழிகள் உத்தியோக பூர்வ மொழியாக அங்கீகரிக்கப்பட வில்லை. அவர்களுக்கு ஆங்கிலம் மற்றும் பிரெஞ்சு மொழி அறிவு இல்லை எனக் கூறி அவர்களுக்கு எதிராக ஓர் ஒழுங்கு முறையான இனவெறி காட்டப்பட்டு வருகிறது" என்றார்.

Mary தனது ஊடகச் சந்திப்பில்தான் ஆர்ட்டிக் துணைப் பிராந்தியத்தில் வளர்ந்து வந்ததால் Inuit மக்களின் மிகவும் பாரம்பரியமான வாழ்க்கை முறை யில் வளர்ந்ததாகக் கூறினார். ஆனால் மனிற்ரோபாவிலிருந்து வர்த்தகம் செய்ய வந்த வெள்ளை இன மனிதரான தனது தந்தையிடமிருந்து எமது பாரம்பரியமற்ற வெளியுலக வாழ்க்கை முறையைக் கற்றுக் கொண்டதாகக் கூறினார்.

Mary ஒரு பத்திரிகையாளரும் எழுத்தாள ருமான நோவாஸ்கோசியாவைச் சேர்ந்த Whit Fraserஐத் திருமணம் செய்துள்ளார். இவர் 1967இல் இருந்து 1991ஆம் ஆண்டு வரை CBC ஊடகத்தில் பணியாற்றினார். இவர்களுக்கு இரண்டு ஆண்களும் ஒரு பெண்ணுமாக மூன்று பிள்ளைகள் இருக்கின்றனர்.

CBC வடக்கு ஊடகச் சேவையில் சிறிது காலம் பணியாற்றிய பின்னர் Mary Simon

தொடர்ச்சி 07ஆம் பக்கம்...)


























RE/MAX ACE
REALTY INC., BROKERAGE
1286 Kennedy Rd Scarborough Ont M1P 2L5
Thas Thirunavukkarasu Dip-in- Eng(Hons)
Broker ABR, SRS
416.388.4333
thasremax@gmail.com www.soldbythas.com
Markham / Kingston
$449,000
Stacked Townhse - 3BR + 2WR
Mccowan /Steels
$515,000
Condo Apt. - 3BR + 2WR
Markham & Sheppard
$545,000
Condo Apt - 2BR + 2WR
Eglinton Ave/Markham Rd
$649,000
Townhouse. - 4BR + 3WR
Bellamy / Eglinton
$779,900
Detached - 4BR + 2WR
Birchmount & Danforth
$869,000
2-Storey Detached - 4BR + 3WR
9th Line / Hoover Park
$899,999
2-Storey Detached - 4BR + 3WR
582 Danforth rd - Toronto
$34,000
Retail/ office /food


Amma Pawn Broker
அம்மா தங்கநகை அடைவு மாடம்
கனேடிய அரச அங்கீகாரம் பெற்ற தங்க நகை அடைவு மாடம்
Covide - 19 சூழ்நிலையை கருத்தில் கொண்டு
அம்மா நகை அடைவு மாடம் நட்பு ரீதியாக வழங்கும்
1.0% முதல் 1.5% வரை
அதிரடி சிறப்பு வட்டி வீதம்
உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும் கனடாவில்
இதுவரை கண்டிராத குறைந்த வட்டி வீதமும்
உங்கள் முதலை பகுதி பகுதியாக கட்டிக் குறைக்கலாம்
நீங்கள் அடைவு வைக்கும் காலத்தில் இலவச காப்புறுதி
உங்கள் பழைய நகைகள் அதிகூடிய விலைக்கு வாங்கப்படும்
உங்கள் நகைகள் திருத்த வேலை செய்து தரப்படும்
வர்த்தகத் துறையில் 27 ஆண்டு நிறைவுடன் நம்பிக்கை - நாணயம் -
உத்தரவாதத்துடன் 5 நிமிடங்களின் உங்கள் கையில் பணமும் பாதுகாப்பும்
எம்மிடம் பழைய நகைகள் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்
அம்மாவுக்கு நிகர் அம்மா நகை மாடமே!
105A - 2425 Eglinton E, Scarborough, ON M1K 5G8
ammapawnbroker@gmail.com
416-757-0034
416-994-3861

# கௌதம புத்தர் ஞானம் பெற்ற புத்தகயாவின் சிறப்புகள்



செல்வராஜ், டெல்லி
www.tamilcartrip.com
WhatsApp: +91.986.816.5715

காசியில் இருந்து 250 கிமீ தொலைவில் இந்தியாவின் பீகார் மாநிலத்தில் கயா மாவட்டத்தில் கங்கை நதியின் துணை நதிகளில் ஒன்றான பால்கு ஆற்றின் மேற்கு கரையில் அமைந்துள்ளது புத்தகயா. புத்த சமய நூல்களின்படி, இளம் இளவரசர் சித்தார்த்தர் என்னும் கௌதம புத்தர் தனது ராஜ வாழ்க்கையை முற்றிலும் துறந்து ஒரு துறவியாக கிமு 530ஆம் ஆண்டில் கயாவுக்கு வந்து ஓர் அரச மரத்தின் கீழ் அமர்ந்து மூன்று பகல்கள் மற்றும் மூன்று இரவுகள் தொடர்ந்து தியானம் செய்து ஞானம் அடைந்தார்.



இவ்வாறு கௌதம புத்தர் ஞானம் பெற்ற இடத்தை நினைவு கொள்ளும்விதமாக மூன்றாம் நூற்றாண்டில் பேரரசர் அசோகர் மகாபோதி கோயிலை உருவாக்கினார். தற்போதைய மகாபோதி கோயில் ஆறாம் நூற்றாண்டில் புனர்சீரமைக்கப்பட்டுள்ளது. முற்றிலும் செங்கல்லால் உருவாக்கப்பட்ட இப்பழமையான புத்த ஆலயம் புத்த சமயத்தினரின் நான்கு புனித தலங்களில் ஒன்றாகக் கருதப்படுகின்றது. மகாபோதி ஆலயத்தில் புத்த சமய மந்திரமான



“புத்தம், தர்மம், சங்கம் சரணம் கச்சாமி” தொடர்ந்து ஒலித்தபடி உள்ளது. இந்த ஒலி தெய்வீக சக்திகளுடன் நேரடி இணைப்பை உண்டாக்குவதற்கு உதவி செய்யும் என்று நம்பப்படுகின்றது. கரு வறையில் தங்க முலாம் பூசப்பட்ட புத்தரின் சிலை அமர்ந்த நிலையில் புன்னகை தவழும் முகத்துடன் காட்சி தருகின்றது.

மகாபோதி ஆலய வளாகத்தில் ஆறு வாரங்கள் புத்தர் தியானம் செய்த ஆறு புனிதமான இடங்கள் உள்ளன அவை யாதெனில்:

(1) புனித போதி மரம் - முதல் வாரத்தில் தியானத்தில் அமர்ந்து புத்தர் ஞானம் பெற்ற இடம். போதி மரத்துக்கு அருகில் மணற்கற்களால் உருவாக்கப்பட்ட வஜ்ராசன மேடை புத்தர் அமர்ந்து தியானித்த இடத்தை குறிப்பிடுகின்றது.

(2) அனிமேஷ்லோகன் சைத்யா பிரார்த்தனை மண்டபம்.

(3) கங்கமனா - புத்தர் ஞானம் பெற்ற பின்பு தியான நடைப்பயணம் செய்த இடம். இங்கு கல்களினால் செதுக்கப்பட்ட தாமரை மலர்கள் புத்தரின் கால் பட்ட இடங்களை குறிப்பிடுகின்றது. இந்த கல் தாமரைகளை தொட்டு வணங்குவதன் மூலம் நல்ல அதிர்ஷ்டம் வந்தடையும் என்று நம்பப்படுகின்றது.

(4) ரத்னசக்கரமா

(5) அஜபால நிக்ரோதா மரம் - இந்த இடத்திலுள்ள தூண், புத்தர் ஐந்தாவது வாரம் தியானம் செய்த இடத்தை குறிப்பிடுகின்றது.

(6) முச்சலிண்டா தாமரை புனித குளம் - இறுதியாக புத்தர் தியானித்துக் கொண்ட இடம். மேலும் இந்த வளாகத்திலுள்ள விளக்கு வீட்டில் வெண்ணை விளக்குகள் மூலம் தீபம் ஏற்றி வழிபடுகின்றனர். இங்குள்ள தியான பூங்காவில் சூரிய



உதயம் முதல் சூரிய அஸ்தமனம் வரை பொதுமக்கள் தியானிக்க அனுமதி உண்டு.

மேலும், மகாபோதி ஆலயத்தை சுற்றி யுள்ள பகுதிகளில் இலங்கை, பூட்டான், மங்கோலியா, சீனா, ஜப்பான், கொரியா, கம்போடியா, மியான்மர், நேபாளம், தைவான், தாய்லாந்து, திபெத் மற்றும் வியட்நாம் நாட்டு புத்த சமயத்தினாரால் உருவாக்கப்பட்ட புத்த மடாலயங்கள் உள்ளன. இந்த ஆலயங்கள் அந்தந்த நாடுகளின் கட்டிடக்கலை மற்றும் காலாசாரத்தை பிரதிபலிப்பதுடன் கயா நகரத்தின் அடையாளமாகத் திகழ்கின்றது. 1989ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட 80 அடி உயரத்துடன் தியான நிலையில் தாமரை மீது அமர்ந்துள்ள புத்தர் சிலை மிகவும் பிரபலமானதாகும்.



# வடக்கை சூழ்ந்துள்ள மூன்று ஆபத்துக்கள்!




தமிழ் மக்கள் அதிகம் செறிந்து வாழும் தமிழரின் தாயகப் பிரதேசமான இலங்கையின் வடக்கு மாகாணம் தற்போது மூன்று விதமான ஆபத்து நிலையில் உள்ளது. ஒன்று- கொரோனா பரவல், இரண்டாவது- போதைப் பொருள் கடத்தல் மற்றும் பயன்பாடு, மூன்றாவது வன்முறைகளின் அதிகரிப்பு.

கொரோனா முதலாவது அலையின்போது வட மாகாணம் பாதுகாப்பான நிலையிலேயே காணப்பட்டது. இப்போது நிலவும் மூன்றாவது அலையில் வடக்கில் யாழ்ப்பாண மாவட்டம் மோசமான நிலையில் உள்ளது. இன்று இலங்கையில் கொரோனா தொற்றாளர் எண்ணிக்கை நாளாந்தம் வீழ்ச்சியடைந்து வருகின்றமையினை சுகாதாரத் தரப்பின் அறிக்கைகளின் மூலமாக அறிந்து கொள்ள முடிகின்றது.

இலங்கையின் 25 மாவட்டங்களில் யாழ்ப்பாணம், கொழும்பு, கம்பஹா, களுத்துறை மற்றும் காலி ஆகிய ஐந்து மாவட்டங்களைத் தவிர ஏனைய மாவட்டங்களில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதாக சமீபத்தில் வெளியிடப்பட்ட சுகாதார அமைச்சின் அறிக்கை தெரிவிக்கின்றது.

கொரோனா தொற்றாளர்கள் அதிகரித்துள்ள ஐந்து மாவட்டங்களில் யாழ்ப்பாணமும் அடங்கியிருப்பதானது தமிழ் மக்களுக்கான ஓர் அபாய அறிவிப்பு என்பதை உணர்ந்துகொள்வது அவசியமானது. இந்த விடயத்தில் வடக்கிலுள்ள அனைத்து தரப்பினரும் கவனம் செலுத்த வேண்டும். அரசியல்வாதிகள், சமூக அமைப்புக்கள் மற்றும், பொதுமக்கள் என அனைத்து தரப்பினரும் இதற்காக களத்திலிறங்கி பணியாற்ற முன்வர வேண்டும்.

இன்று நாட்டில் கொரோனா கட்டுப்பாடுகளில் தளர்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பயணக்கட்டுப்பாடு என்ற பெயரில் ஊரடங்கு நிலை போன்றதொரு முடக்க நிலை தொடர்ச்சியாக அமல்படுத்தப்பட்டிருந்தது. தற்போது அந்த நிலை தளர்த்தப்பட்டு, மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்துக் கட்டுப்பாடு மட்டுமே நடைமுறையில் உள்ளது.

பயணத் தடை நீக்கப்பட்டதால் மக்கள் தங்கள் நாளாந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான நிலை ஏற்பட்டுள்ளது. நாளாந்தம் தொழில் செய்யும் தொழிலாளர்கள் தங்கள் தொழில்களுக்கு செல்ல முடிகின்றது. கொரோனா பரவல் மேலும் அதிகரிக்குமானால் மீண்டும் முடக்க நிலைக்கே முகம் கொடுக்க வேண்டியிருக்கும். அவ்வாறு தொடர்ந்தும் முடக்க நிலைக்கு முகம் கொடுத்து வாழ்வது இயலாத காரியம். எனவே, சுகாதாரக் கட்டுப்பாடுகளைக் கவனமாகக் கடைப்பிடிப்பது அவசியமானது.

இன்று, முகக் கவசம் அணிவது, சமூக இடைவெளியை பேணுவது என்பன வட மாகாணத்தில் முறையாகக் கடைப்பிடிக்கப்படுவதில்லை. மக்கள் அதிகம் செல்லக்கூடிய வணிக நிலையங்களில் இந்த நடைமுறை கட்டாயம் கடைப்பிடிக்கப்படல் வேண்டும். வணிக நிலையங்களில் பொருள் கொள்வனவிற்குச் செல்வோர் மட்டுமன்றி அந்த வணிக நிலையங்களில் பணியாற்றுவோரும் இச்சுகாதார நடைமுறைகளை சரியாகக் கடைப்பிடிப்பதில்லை.

வங்கிகள் போன்ற நிறுவனங்களில் இந்த நடைமுறை கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அதேபோன்று சகல தனியார் நிறுவனங்கள், வணிக நிலையங்களிலும் முகக்கவசம் அணிதல், ஒவ்வொருவருக்கான இடைவெளிகளைப் பேணல் என்பவற்றில் கட்டாய நடைமுறைகளை மேற்கொள்ள வேண்டும். இந்த நடைமுறைகளை கடைப்பிடிக்காத தனியார் நிறுவனங்கள், வணிக நிறுவனங்கள் மீது உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

உலகில் தடுப்பூசிகள் போட்டப்பட்டதன் பின்னரே கொரோனா பரவல் நிலை கட்டுப்பாட்டிற்குள் வந்துள்ளது. எனினும், கட்டுப்பாட்டு நிலைக்குப் பின்னர் சுய கட்டுப்பாடுகளில் தளர்வுகளை ஏற்படுத்திய நாடுகளில் மீண்டும் கொரோனா பரவல் நிலை அதிகரிக்கின்றமையினையும் அவதானிக்க முடிகின்றது.

இலங்கையிலும் தற்போது தடுப்பூசிகள் போடப்பட்டு வருகின்றமையினால் கொரோனா தொற்றாளர் எண்ணிக்கையில் வீழ்ச்சி நிலை காணப்படுகின்றது. பயணக் கட்டுப்பாடு அமலில் இருந்த காலத்தில் நாளாந்தம் மூவாயிரத்தை எட்டிய தொற்றாளர் எண்ணிக்கை பயணக் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டதன் பின்னர் ஆயிரத்து ஐந்நூறிற்குக் கீழான எண்ணிக்கையில் பதிவாகி வருகின்றமை ஒரு முன்னேற்றம் என்றே கூறலாம்.

ஆனாலும், கொரோனாவால் நாளாந்தம் உயிரிழப்போர் எண்ணிக்கையில் பாரிய மாற்றம் எதுவும் நிகழவில்லை. தற்போதும் நாளாந்தம் முப்பதிற்கும் முப்பத்தைந்திற்கும் இடைப்பட்ட எண்ணிக்கையில் மரணங்கள் பதிவாகி வருகின்றன.




இலங்கையில் பல பாகங்களிலும் தொடர்ச்சியாகத் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. வட மாகாணத்திலும் தற்போது தடுப்பூசி வழங்கும் நடவடிக்கை நடைபெற்று வருகின்றது. தடுப்பூசிகளால் தொற்றாளர் எண்ணிக்கை குறைவடையலாம். ஆனால், சுகாதார நடைமுறைகளை கைவிட்டால் மீண்டும் மோசமான நிலையே ஏற்படும். இது தொடர்பில் வட மாகாணத்தில் குறிப்பாக, யாழ்ப்பாண மாவட்டத்தில் வாழும் மக்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

கடந்த 12ஆம் திகதி திங்கள் கிழமை யாழ்.மாவட்ட சர்வமதப் பேரவையின் ஏற்பாட்டில் கவனம்- அபாயம்- அவதானம் எனும் தொனிப்பொருளில் யாழ்ப்பாணத்தில் கொரோனா விழிப்புணர்வு செயற்பாடு ஒன்று முன்னெடுக்கப்பட்டது. இந்த நிகழ்வில், யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் மதத் தலைவர்கள் ஆகியோர் கலந்துகொண்டு, கொரோனா விழிப்புணர்வு செயற்பாட்டினை ஆரம்பித்து வைத்தனர். இவ்வாறு மதம் மற்றும், சமூகம் சார்ந்த அமைப்புகள் பொதுமக்களுக்கான விழிப்புணர்வு நடவடிக்கைகளை தொடர்ச்சியாக முன்னெடுக்க முன்வர வேண்டும். மக்களின் சுயகட்டுப்பாடும், விழிப்புணர்வு நடவடிக்கைகள் மூலமாகப் பெற்றுக்கொள்ளும் கட்டுப்பாடுகளும் மக்களை ஆபாய நிலையில் இருந்து மீட்கும்.

அடுத்ததாக- வடக்கில் இன்று மோசமான நிலையில் காணப்படும் போதைப்பொருள் கடத்தல் மற்றும் அதன் பயன்பாடு என்பவற்றை முற்றாக தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். இந்த நடவடிக்கைக்கு பாதுகாப்புத் தரப்பினரே களத்தில் இறங்க வேண்டும். இதில் அவர்களின் பொறுப்பே முக்கியமானது. போதைப் பொருள் கடத்தல்காரர்கள் மற்றும் விற்பனையாளர்கள் தொடர்பில் தகவல் வழங்குவதற்குப் பொதுமக்கள் பயப்படுகின்றனர். தகவல் வழங்குவோர் தொடர்பில் குற்றவாளிகளுக்குத் தகவல் வழங்கப்படுகின்றன. எனவே, பாதுகாப்புத் தரப்பினர் நேர்மையான முறையில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

வடக்கின் கடற்பரப்பில் கடத்தி வரப்படும் கேரள கஞ்சா அவ்வப்போது பிடிபட்டாலும் கடத்தல் சம்பவங்கள் குறைந்தபாடில்லை. கோடிக்கணக்கான ரூபாய்கள் பெறுமதியான கஞ்சாப் பொதிகள் இவ்வாறு கடத்தி வரப்படுகின்றன. இந்தியாவில் இருந்து இவை கடத்தி வரப்படுகின்ற போது அதனோடு சேர்த்து புதிய டெல்டா வைரசும் கடத்தி வரப்படுகின்ற அபாயமும் உள்ளது.

அரசியல்வாதிகளும், சமூக அக்கறை மிக்கவர்களும் அரசாங்கத்திற்கும் பாதுகாப்புத் தரப்பினருக்கும் இது தொடர்பில் அழுத்தம் கொடுக்க வேண்டும்.

மற்றது - கொரோனா முடக்கங்கள், இறுக்கங்களுக்கு மத்தியிலும் வடக்கில் வாள்வெட்டு போன்ற வன்முறை சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. இதனைக் கட்டுப்படுத்துவதிலும் பாதுகாப்புத் தரப்பினரின் நேர்மையான நடவடிக்கையே பிரதானமானது.


விளம்பரம்
VLAMBARAM

31ஆவது ஆண்டில்

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலக பொறுப்பாளர்: பிரசாந்தி அருள்தாசன்
பதிப்பு: Canyon Press Inc.



'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.



Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059/ FAX: 416-286-0344
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com

Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

## இலங்கையில்...

06ஆம் பக்கத்தொடர்ச்சி

ஊடகவியலாளரும் மலேசியாவில் வாழ்ந்த வருமான மாணிக்கசோதி சரவணமுத்துவின் மகளான பிரபல மருத்துவருமான மனோராணி சரவணமுத்துவின் மகள் என்பதும் குறிப்பிடத்தக்கது. அவரது தாயார் உடனடியாக வெலிக்கடை காவல் நிலையத்துக்குச் சென்று முறையிட்ட போதும் அவர் தொடர்பான தகவல்களை வழங்க மறுத்துவிட்டனர். ஆனால், அதற்கு அடுத்த நாள் பெப்ரவரி 19ஆம் திகதி ரிச்சர்ட்டின் உடல் கொழும்பில் இருந்து தெற்கே 12 மைல் தூரத்தில் உள்ள மொரட்டுவை கடற்கரையில் கண்டெடுக்கப்பட்டது. அவர் தலையிலும் கழுத்திலும் சுடப்பட்டிருந்தார் அவரது வாயெலும்பில் முறிவு காணப்பட்டது. படுகொலை செய்யப்பட்ட ரிச்சர்ட்டின் உடலை அவரது நண்பரான, (2006இல் கடத்தி கொலை செய்யப்பட்ட) ஊடகவியலாளர் தராகி சிவராம் அடையாளம் காட்டினார்.

தொடரும்...

# MORTGAGE

MORTGAGE IN ANY SITUATION

- நல்ல ரேட்ல மோட்கேஜ் ( OAC*)
- லைன் ஒப் கிரெடிட் (HELOC)
- Private 1st Mortgage
  (No Income Verification)
- ரீபைனான்ஸ்,Title Transfer, ரினிவல்
- 2வது, 3வது மோட்கேஜ் (Funded within 48hrs)
- பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கான மோர்ட்கேஜ்
- எல்லா கடனையும் ஒரே பேமென்டாக்க
- பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட

**கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல்**
**வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?**

MORTGAGE CLINIC



www.mortgageclinicanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது



**Cell : 416-624- 4843**

416-613-2788 / 416-816-9011

ஜெ(Jey)இராசதுரை

MBA. BBA (Hon) AMP

Team Leader / Mortgage & Real Estate Broker

RIGHT AT HOME REALTY INC.

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530

Brokerage: 112-895 Don Mills Rd, Toronto ON M3C 1W3 Corp office : 200-2005 Sheppard Ave E, Toronto ON M2J 5B4

# இலங்கையில் படுகொலை செய்யப்பட்ட பத்திரிகைச் சுதந்திரம்




ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் ஆட்சியில், 1979ஆம் ஆண்டின் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தமிழருக்கு எதிரான பல்வேறு அடக்குமுறைகள் பிரயோகிக்கப்பட்டன. அதற்கும் அப்பால் இனம், மதம், மொழி வேறுபாடுகள் இன்றிச் செயற்பட்ட ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டமையும், கைது செய்யப்பட்டுச் சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்பட்டமையும், காணாமலாக்கச் செய்யப்பட்டமையும், பத்திரிகை நிறுவனங்களை தாக்கியும், எரித்தும் மேற்கொள்ளப்பட்ட அராஜகங்கள் அதிகளவில் நடைபெற்றுள்ளன.

பத்திரிகைச் சுதந்திரத்தையே படுகொலை செய்யும் அளவுக்கு 1979ஆம் ஆண்டில் இருந்து இன்றுவரை பயங்கரவாதத் தடைச் சட்டம் ஊடகத் துறையின்மீது கடுமையாகப் பிரயோகிக்கப்பட்டு வருகின்றது.

1992ஆம் ஆண்டிற்கும் 2021ஆம் ஆண்டிற்கும் இடையில் உலகளாவிய ரீதியில் 1495 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டதாக CPJ எனப்படும் ஊடகவியலாளர்களைப் பாதுகாக்கும் குழுவின் (Committee to Protect Journalist) வருடாந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் பாகுபாடான, இன ரீதியான, மனிதநேயத்திற்கு எதிரான நடவடிக்கைகளை விமர்சிக்கும் எழுத்தாளர்கள், பத்திரிகை ஆசிரியர்கள், ஊடகவியலாளர்கள் அதிகளவில் 1979 ஆம் ஆண்டிற்குப் பின்னர், பாதிக்கப்பட்ட நிலையில், உண்மைகளை எழுதுவதற்கும், பேசுவதற்கும், கலை வடிவங்களில் வெளிப்படுத்துவதற்கும் அச்சமடைந்த நிலையில், மரண அச்சுறுத்தல் காரணமாக 20இற்கும் மேற்பட்ட தமிழ், சிங்கள, முஸ்லிம் ஊடகவியலாளர்கள் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளனர். மேலும் பலர் தமது தொழில்களையே துறந்துள்ளனர். அதேவேளை, பாதுகாப்புப் படையினரின் காவலில் இருந்தபோது பல ஊடகவியலாளர்கள் காணாமல் போயுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரச படையினராலும் அவர்களுடன் சேர்ந்து இயங்கும் துணை இராணுவக் குழுக்களினாலும் இதுவரை நூற்றி ஐம்பதிற்கும் மேற்பட்ட ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகப் பணியாளர்கள் கொல்லப்பட்டும், காணாமல் ஆக்கப்பட்டும் உள்ள நிலையில், பத்திரிகைச் சுதந்திரத்திற்கு எதிரான படுகொலைகள் ஒப்பீட்டளவில் இலங்கையிலேயே அதிகளவில் இடம்பெற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அந்தவகையில் ஜெனீவாவைத் தளமாகக் கொண்ட சர்வதேச ஊடகக் கண்காணிப்புக் குழு, உலகின் ஊடகப் பணியாளர்களுக்கு மிகவும் ஆபத்தான நாடுகளின் பட்டியலில் இலங்கை மூன்றாவது இடத்தில் இருப்பதாகச் சுட்டிக் காட்டியுள்ளது.

பொதுவாக அரச படையினரின் தாக்குதல்களுக்கு உள்ளாக்கப்பட்ட பத்திரிகையாளர்களில் பெரும்பாலானோர், புகைப்படக் கலைஞர்கள் மற்றும் தொலைக்காட்சி கமரா இயக்குநர்களாகவே உள்ளனர். அவர்களின் புகைப்படக் கருவிகள் இராணுவத்தினரால் பறிக்கப்பட்டுடன் பல சேதமாக்கப் பட்டவையாகவோ அல்லது கைகலப்பின் பொழுது காணாமல் போனவையாகவோ இருக்கின்றன.



கொழும்பைத் தளமாகக் கொண்ட சுயாதீன ஊடக இயக்கத்தின் அறிக்கையின்படி, குறைந்தது 20 புகைப்பட ஊடகவியலாளர்கள் படுகாயமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 'தி சண்டே ரைம்சின்' புகைப்படக் கலைஞரான புஷ்பகுமாரா இராணுவத்தினரால் தாக்கப்பட்டு கை உடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். தி சண்டே லீடரின் புகைப்படக் கலைஞரான ஸ்பென்சர் முழங்கால் மீது ரப்பர் தோட்டாவால் தாக்கப்பட்டதால் முழங்கால் சில்லு உடைந்து பலத்த காயத்திற்கு உள்ளானார்.

அதேபோன்று எம்.ரி.வி தொலைக்காட்சி நிறுவனத்தின் புகைப்படக் கலைஞர்களான பத்தினிவாசன், பிரியந்த, எம்டிவி புகைப்படப்பிடிப்பாளர் கே.கருணரத்தினா மற்றும் எம்டிவி புகைப்படக் கலைஞரும், நிருபருமான ஷெஹன் பரணகே இருவரும் அடிவயிற்றில் பலத்த காயங்களுக்கு ஆளாயினர். ஜப்பானிய ஒளிபரப்பு நிறுவனமான என்.எச்.கேயின் தலைமைச் செயலகம் அமைந்துள்ள புதுடெல்லி நிருபர் ஹிரோமி ஹிரோஸ், என்.எச்.கே-வின் புகைப்படப்பிடிப்பாளர் நோபுஹிரோ இக்கேடா மற்றும் ரொய்ட்டர்ஸ் புகைப்படக் கலைஞர் அனுருத்த லோகுஹாபுராச்சி ஆகிய புகைப்பட ஊடகவியலாளர்கள் படுகாயமடைந்தனர்.

ஆசிய மனித உரிமைகள் ஆணையம் (The Asian Human Rights Commission - AHRC) 2004 முதல் இலங்கையில் சட்டவிரோதப் படுகொலைகள் மற்றும் ஊடக நிறுவனங்களின் ஊழியர்கள் அச்சுறுத்தப்படுதல் தொடர்பான நம்பகமான ஆதாரங்களில் இருந்து தகவல்களைப் பெற்றுள்ளது. சில வழக்குகள் விசாரிக்கப்பட்டுள்ளன, இன்றுவரை ஒருவர் கூட நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவில்லை. போதிய விசாரணைகளின்றி இந்தப் படுகொலைகளுக்குத் தண்டனை விதிக்கப்படுவதில் தாமதமேற்படுவதாக AHRC கவலை கொண்டுள்ளது.

1999ஆம் அண்டு நவம்பர் 6ஆம் திகதி இலங்கை அரச படைகளின் செய்திகள் வெளிவருவதைத் தடுக்கும் வகையிலும், போர் மற்றும் பொதுமக்களின் அழிவுகள் தொடர்பான உண்மையான தகவல்களை மக்கள் அறிந்து கொள்ளாது தடுக்கும் வகையிலும் இலங்கை தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் ஆரியா ரூபசிங்க, “முக்கியமான இராணுவ தகவல்களை வெளியிடுதல், ஒளிபரப்பு செய்தல் அல்லது பரப்புதல்” என்பவை தொடர்பாக அனைத்து ஊடகங்களுக்கும் உடனடியாகத் தடைவிதிக்கப்பட்டு, பத்திரிகைத் தணிக்கை அமலாக்கப்பட்டுள்ளதாக அறிவித்து ஊடக சுதந்திரத்திற்கான மேலும் கட்டுப்பாடுகளை இறுக்கினார். அந்தவகையில் இலங்கை அரச படையினராலும், அவர்களுடன் சேர்ந்தியங்கும் துணை இராணுவக் குழுக்களினாலும் கொல்லப்பட்ட நூற்றுக்கணக்கான ஊடகவியலாளர்களில், சிலரின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- 1999ஆம் ஆண்டு டிசம்பர் 18ஆம் திகதி, இளம் ஊடகவியலாளர்களான, மகாராஜா தொலைக்காட்சி வலையமைப்பின் புகைப்படப்பிடிப்பாளரான இந்திகா பத்தினிவாசனும், சுதந்திர தொலைக்காட்சி வலையமைப்பின் (ITN) செய்தியாளரான அனுர பிரியந்தவும் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்காவின் தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றைப் பதிவுசெய்யும் பொழுது, கொல்லப்பட்டனர்.

- 1990ஆம் ஆண்டு பெப்ரவரி 17ஆம் திகதி கொல்லப்பட்ட ரிச்சர்ட் டி சொய்சா, இலங்கையின் முன்னணி ஊடகவியாளாளரும், மனித உரிமைச் செயற்பாட்டாளரும், சிறந்த நடிகருமாவார். ரிச்சர்ட் தனது தாயாருடன் வெலிகடவத்த வீடமைப்புத் திட்டத்தில் வாழ்ந்து வந்தபொழுது, 17.02.1990 அன்று இரவில் அவரது வீட்டிற்கு வந்த இராணுவ புலனாய்வாளர்களினால் கடத்தப்பட்டு 1990 பெப்ரவரி 17 அல்லது 18இல் கொலை செய்யப்பட்டார். இலங்கையின் தேசிய தொலைக்காட்சி சேவையான ரூபவாகினியில் ஆங்கிலச் செய்தி வாசிப்பாளராகவும் மற்றும் ஒரு பத்திரிகையின் ஆசிரியராகவும் கடமையாற்றிய ரிச்சர்ட் கொலை செய்யப்பட்ட போது, உலக ஊடகவியலாளர் சேவையின் கொழும்பு கிளையின் பொறுப்பாளராகவும் செயற்பட்டு வந்தார்.

இவர் ஊடகத்துறையில் ஆற்றிய சேவையைக் கௌரவிக்கும் வகையில் ஐ.நா.வினால் 'சுதந்திர ஊடகவியலாளருக்கான விருது' ஒன்று ரிச்சர்ட் டி சொய்சாவின் பெயரில் வழங்கப்பட்டு வருகிறது. ரிச்சர்ட் கொழும்பில் ஒரு சிங்களத் தந்தைக்கும், தமிழ்த் தாய்க்கும் பிறந்தவராவார். ரிச்சர்ட்டின் தாய் பிரபல

(தொடர்ச்சி 04ஆம் பக்கம்...)



# கனடாவில்...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

வட குவிபெக் Inuit அமைப்பின் இயக்குனர் குழுவிற்குச் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டதன் மூலம் தனது பொது வாழ்க்கையை அரச ஊழியராக



ஆரம்பித்தார்.

1978இல் அவர் Makivik என்ற கூட்டுத் தாபனத்திற்குத் துணைத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். பின்னர் அந் நிறுவனத்தின் தலைவராக 1982இல் தெரிவு செய்யப்பட்டார். Makivik கூட்டுத் தாபனம் Inuit மக்களுக்குச் சொந்தமான பிரதேசங்களை புனரமைப்புச் செய்ய மத்திய அரசால் வழங்கப்படும் பணத்தை நிர்வகிக்கும் நிறுவனமாகும். இந்நிறுவனம் பல மில்லியன் டொலர் பெறுமதியான முதலீடுகளை நிர்வகித்து வருகிறது. இந்நிறுவனம் ஆர்டிக் பகுதியில் வடக்குக் கனடா (Canada North) எனப்படும் மிகப்பெரிய விமான சேவை நிறுவனத்தையும் நிர்வகித்து வருகிறது.

Brian Mulroney அரசு 1990இல் கனடிய அரசியலமைப்புத் திருத்தம் பற்றி Charlottetownஇல் கலந்துரையாடும்போது அவருக்கு Inuit தலைவராக ஆலோசனை வழங்க Mary உடனிருந்தார்.

Jean Chretien அரசு 2002இல் இவரைக் கனடாவின் முதலாவது ஆர்ட்டிக் தூதுவராக (Arctic Ambassador) நியமித்தது. Mary கனடாவின் தூதுவராக டென்மார்க்கிலும் சில காலம் பணியாற்றினார்.

Mary தேசிய Inuit மக்களின் அமைப்பின் தலைவராக இருக்கும்போது அப்போதைய பிரதமர் Stephen Harper கனடியக் குடியிருப்புப் பள்ளிக்கூடங்களில் முதற் குடிமக்களுக்கு நடைபெற்ற துஷ் பிரயோகங்களுக்கு நாடாளுமன்றத்தில் கனடிய மத்திய அரசு சார்பில் மன்னிப்புக் கேட்டபோது அதைப் பெருமனத்துடன் ஏற்றுக் கொண்டவர்.

கனடிய பூர்வீகக் குடிமக்களுள் ஒருவராக அடையாளப்படுத்தப்படும் Mary Simonஇற்கும் இராணியின் பிரதிநிதியான ஆளுநர் Mary Simonஇற்கும் இடையில் எந்தவித முரண்பாடுகளையும் நீங்கள் காணவில்லையா? என ஊடகவியலாளர் ஒருவரின் கேள்விக்குப் பதிலளித்த Mary Simon, “இல்லை, ஏனென்றால் கனடாவில் இராணியின் பிரதிநிதியாகத் தற்போது நாம் காணும் சில நிகழ்வுகளுக்கு வழிவகுத்த சூழ்நிலைகள் குறித்து நான் மிகவும் அக்கறை கொண்டுள்ளேன். நம் நாடு முழுவதும் வலியும் துன்பமும் இருப்பதாகப் பூர்வீகக் குடிமக்களுள் ஒருவராக நான் நன்றாக அதைப் புரிந்து கொள்கிறேன்” என்றார்.

அவர் மேலும் கூறுகையில் “இந்த முக்கியமான பாத்திரத்தை ஏற்றுக் கொள்வீர்களா என என்னிடம் கேட்டபோது நான் மிகவும் உற்சாகம் அடைந்தேன். இது கனடிய மக்களுக்கும் பூர்வீகக் குடிமக்களுக்கும் சேர்த்து உதவக்கூடிய ஒரு நிலையை உருவாக்கும் என நான் உணர்ந்ததாலேயேதான் இந்தப் பொறுப்பை ஏற்க நான் சம்மதித்தேன்”



Mary Simon and her husband Whit Fraser

என்றார்.

ஒரு மிகவும் திறமையான பேச்சு வார்த்தையாளரான Mary Simon தனது தொழில் வாழ்க்கையில் பல முக்கிய அரசியல் பிரச்சினைகளைத் தனது வாதத் திறமையால் பேரம் பேசித் தீர்த்து வைத்துள்ளார். 1975இல் James Bay மற்றும் வடக்கு குவிபெக் ஒப்பந்தத்தைக் குவிபெக் வடக்கில் வாழும் Cree மற்றும் Inuit மக்களுக்கும் குவிபெக் மாகாண அரசுக்கும் இடையில் மிகவும் சாதுரியமான முறையில் இவர் தீர்த்து வைத்தவர். ஆர்ட்டிக் தூதுவராக இருந்த காலத்தில் அமெரிக்க அரசுடன் ஏற் பட்டுள்ள முரண்பாடுகளை கனடாவிற்குச் சார்பாகத் தனது வாதத் திறமையால் முடிவுக்குக் கொண்டு வந்தார்.

இவ்வாறு கனடிய அரசியலில் ஆழ்ந்த அனுபவம் Mary Simonஇற்கு இருப்பதால் தான் கனடியப் பிரதமர் தனது ஊடகவியலாளர் மாநாட்டில் “154 ஆண்டுகளுக்குப் பின்னர் இன்று எமது நாடு இருக்கும் இந்தச் சரித்திரப் பிரசித்தி வாய்ந்த வேளையில் இவரைவிடத் திறமையான வேறு ஒருவரையும் இப் பதவிக்கு அமர்த்த இயலாது” என்றார்.




# அப்துல் கலாம்



சொல்லில் உண்மை,
செயலில் எளிமை,
வாழ்க்கையில் தனிமை,
வறுமையிலும் செம்மை!

பேச்சில் புதுமை,
பணியில் நேர்மை,
உள்ளத்தில் வெண்மை,
இலட்சியத்திலோ வலிமை!

மாணவர்களிடத்தில் மென்மை,
மழலைகளிடத்தில் இனிமை,
ஆட்சியில் கடுமை
அன்புக்கு மட்டுமே அடிமை!

தோல்விகளுக்கு அஞ்சாமை,
துன்பங்களுக்குப் பணியாமை,
எண்ணத்தில் மேன்மை,
ஒழுக்கத்தில் தூய்மை,
மனிதர்களுக்கோர் நல்உவமை!

மண்ணிலே பிறந்து
மனிதராய் வாழ்வோரே!
இத்தனை குணங்களையும்
இயல்பாய் கொண்டு

ஆ....வோம் நாமும்
அப்துல்கலாமாவோம்!

காரைக்குடி பாத்திமா ஹமீத்

CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!



• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE Tel: 416-289-7514
OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7

# தமிழ் சினிமாவை புதிதாக வார்த்தவர்!

## பாரதிராஜா பற்றி பகிர்கிறார் மனோஜ்குமார்

**நேர்கண்டவர்: கண்ணன்**

தமிழ் திரைத்துறையின் நூற்றாண்டைக் கடந்த வரலாற்றில் தவிர்க்க முடியாத 10 இயக்குநர்களைப் பட்டியலிட்டால் அதில் முக்கிய இடம் பிடிப்பவர் பாரதிராஜா. அறிமுக படத்திலேயே (16 வயதினிலே) சப்பாணி கதாபாத்திரம் மூலம் தமிழ் திரைப்படத்தை எழுந்து நடக்க வைத்த இயக்குநர் இமயம் சர்வ சாதாரண தோற்றமுடையவர்களைக்கூடக் கதாநாயகனாக நடிக்க வைத்து பிரபல நட்சத்திரங்களின் செல்வாக்கைப் புரட்டிப் போட்ட புதுமைவாதி. அரங்க அமைப்புகளின் தளத்தில் ஆணி அடிக்கப்பட்டிருந்த தமிழ் திரைத்துறையின் கேமிராவைப் பிடுங்கிக் கிராம வெளியின் காற்றை சுவாசிக்க வைத்த கலைவாதி. தமிழ்நாட்டு மக்களுக்காக மட்டுமல்ல ஈழத் தமிழர்கள் நலனுக்காகவும் தயங்காமல் குரல் கொடுத்து வரும் போராளி. வரும் ஜூலை 17ஆம் திகதி 80 வயதைப் பூர்த்தி செய்கிறார் பாரதிராஜா.

பாரதிராஜாவின் நெருங்கிய சொந்தக்காரராக அவரது தனிப்பட்ட வாழ்க்கையையும் பாரதிராஜாவிடம் உதவி இயக்குநராகவும் அவரது திரை வாழ்க்கையையும் அறிந்தவர் இயக்குநரும் நடிகருமான மனோஜ்குமார். தனது தாயாரின் தம்பி என்ற வகையில் தாய் மாமனாகவும் அக்காவின் கணவர் என்ற வகையில் மச்சானாகவும் இருக்கும் பாரதிராஜாவைப் பற்றி மண்வாசனையுடன் இங்கே பகிர்ந்து கொள்கிறார் மனோஜ்குமார்.

“அல்லிநகரம் என்ற சின்னஞ்சிறிய கிராமத்தில் என் தாய்மாமன் பால் பாண்டியாக பாரதிராஜா பயணித்த காலம் அது. நடிப்பும் நாடகமும் அவருக்குத் தீராகாதலாக இருந்த காலகட்டம். சித்திரை பிறந்துவிட்டால் கோயில் திருவிழாவில் கூத்தும் பாட்டும் என்று திரிந்த காலம். திருவிழாவின் போது தெருக்களில் மேடை போட்டு உணர்ச்சிகரமாக வசனம் பேசி கதாநாயகனாகக் கர்ஜிப்பார் என் மாமா பால் பாண்டியன் என்கிற பாரதிராஜா.

ஊரில் அவர் நாடகம் போடும்போது அவர் இளைஞர், நான் சின்ன பையன். அப்போது ஆறாம் வகுப்புதான் படித்துக் கொண்டிருந்தேன். அவர் கதாநாயகனாக மேடையில் நடிக்கும்போது கீழே உட்கார்ந்து வேடிக்கை பார்த்திருக்கிறேன். அவர் மேடை ஏறினாலே சென்னை வானொலி நடிகர் பால் பாண்டியன் என்று குரல் கொடுப்பார்கள். ஏனென்றால், அப்போது வானொலியில் அவருடைய நாடகங்கள் ஒலிபரப்பாகும்.

அப்போதிலிருந்தே அவருக்குக் கணீர் குரல்தான். உணர்ச்சிகரமாக நடிக்கும் போது கைத்தட்டல் அதிரும். என் மாமா கதாநாயகனாக நடிக்க, ஆர்மோனியப் பெட்டியை வைத்துக்கொண்டு இளைய ராஜா இசையமைக்க, அவருக்குப் பின்னணியாகக் கங்கை அமரன், பாஸ்கர் எல்லாம் அமர்ந்திருப்பர். கதாசிரியர் ‘அன்னக்கிளி’ ஆர். செல்வராஜும் அவர்களுடன் வருவார்.



பண்ணைபுரத்தில் இருந்து இளையராஜா அவர்கள் சகோதரர்களுடன் பேருந்து ஏறி வருவார்கள். நாடகம் முடிந்ததும் அல்லி நகரத்தில் சாப்பிட்டுத் தங்கிவிட்டுத் திரும்பிப் போவார்கள்.

மொத்த நாடகக் குழுவுக்கும் சேர்த்து பத்து ரூபாய் பிரிந்தாலே பெரிய விஷயமாக இருக்கும். ஆனாலும் இந்த அணி அலுத்துக்கொள்ளாது.

அவர்கள் போட்ட நாடகத்தில் இடம்பெற்ற பாடல் பிற்காலத்தில் திரைப்படப் பாடல்களாகவும் வந்திருக்கிறது. ‘ஒரு ராகம் பாடும்போது பாடல் கேட்டது’ இப்போது நான் கேட்டாலும் அந்த நாடகக் கால என் தாய் மாமனின் நடிப்பும் இளையராஜா சகோதரர்களின் இசையும் நினைவுக்கு வருவதுடன் எனது ஆறாம் வகுப்பு உருவமே கண்முன் வந்து நிற்கும்.

முதலில் நடிகராக வேண்டுமெனத்தான் மாமா விரும்பினார். பின்னர் கன்னட திரைத்துறையின் கடவுள் எனப் போற்றப்படும் இயக்குநர் புட்டண்ணா கனகலிடம் உதவி இயக்குநராக இணைந்து தன் திரைப் பயணத்தை ஆரம்பித்தார். தொடர்ச்சியாகப் பல இயக்குநர்களிடம் பணியாற்றிவிட்டு முதல் வாய்ப்புக்காகக் காத்திருந்தார்.

இன்றைய தமிழ் திரையுலகின் உச்ச நட்சத்திரங்களான ரஜினிகாந்த், கமல் ஹாசனை வைத்து தனது முதல் படமான ‘16 வயதினிலே’ படத்தை இயக்கினார். அந்தப் படத்தின் மூலம் தமிழ் திரையுலகம் பின்பற்றிவந்த ஆதிகால சூத்திரங்களை உடைத்தெறிந்து அரங்கத்திலிருந்து அவுட்டோருக்குத் தமிழ் திரையுலகைக் கைப்பிடித்து அழைத்து வந்தார். கிராமத்து வயல் வெளிகளிலும் வீதிகளிலும் அந்த மக்களின் வாழ்வியலையும் படம் பிடித்துக்காட்டினார். அதோடு உரைநடையாக இருந்த தமிழ்த் திரை வசனங்களை வட்டார வழக்குக்கு மாற்றினார்.

அடுத்து அவரது இயக்கத்தில் வெளியான ‘கிழக்கே போகும் ரயில்’ படமும் பெரிய வெற்றி. அந்த சமயத்தில் ‘அவருக்குக் கிராமத்துப் பின்னணி கொண்ட கதைகளை மட்டும்தான் இயக்கத் தெரியும்’ என்ற விமர்சனங்கள் எழுந்தன. அதற்கு ‘சிகப்பு ரோஜாக்கள்’ படத்தின் மூலம் பதிலடி கொடுத்தார். தொடர்ந்து ‘டிக் டிக் டிக்’, ‘மண் வாசனை’, ‘புதுமைப் பெண்’, ‘ஒரு கைதியின் டைரி’, ‘அலைகள் ஓய்வதில்லை’, ‘வேதம் புதிது’ என தொடர்ச்சியாகப் படங்கள்...

1985இல் நடிகர் சிவாஜி கணேசனை புதிய பரிணாமத்தில் நடிக்க வைத்து மாமா இயக்கிய ‘முதல் மரியாதை’ தமிழ் திரைத் துறையின் கிளாசிக் காதல் படம்.

இன்றைய தமிழ்த் திரை முன்னணி நட்சத்திரங்கள் பலர் பாரதிராஜாவின் பட்டறையில் பட்டை தீட்டப்பட்டவர்கள்தான். இதில் நாயகிகளின் பங்கு அதிகம். நடிகர், நடிகைகள் தவிரவும் எத்தனையோ கலைஞர்களுக்கு அவர் போட்டுக் கொடுத்த பாதை ஏணியாக இருந்திருக்கிறது. மணிவண்ணன், மனோ பலா, பாக்கியராஜ் என 80களின் பிற்பாதியில் அசத்திய இயக்குநர்கள் பலர் பாரதிராஜாவின் வார்ப்புகள்தான்.

எனக்கும் மட்டும் அது இல்லாமல் போகுமா? அவரிடம் உதவி இயக்குநராகக் கற்றுக்கொண்ட பாடமே பின்னாளில் நானும் இயக்குநராகக் கைகொடுத்தது. அவருக்கு ஏதாவது பிரச்சனை என்றால் முதல் ஆளாகப் போய் நிற்பேன். என் குருநாதர் என்பதையும் தாண்டி தாய் மாமன் என்ற பாசக் கயிறுதான் என்னை அங்கு கூட்டிச்செல்லும். அதேபோல் என் வெற்றிகளில் முதல் சந்தோஷம் பெறக் கூடியவர், அவர்தான். தன் சொந்த மருமகன், மச்சான் என்ற அன்பே அதற்குக் காரணம்.

எங்கள் உறவுகளில் வீட்டில் நடக்கும் எல்லா விசேஷங்களிலும் தாய் மாமனுக்குத்தான் முக்கியத்துவம் கொடுப்பார்கள். தன்னுடன் பிறந்தவளுக்கு வாரிசு பிறந்தால் அந்தக் குழந்தை வீரத்துடனும் விவேகத்துடனும் வளரவேண்டும் என்ற நோக்கத்தில் கத்தி முனையிலும் பேனா முனையிலும் இனிப்பு தண்ணீர் தொட்டு வைப்பது தாய் மாமன்தான். முதல் தலை முடி எடுப்பது என்றாலும் குண்டு மணி அளவு காதில் குத்துவது என்றாலும் தாய் மாமன் மடியில் வைத்துத்தான் செய்வார்கள். வெளி மாப்பிள்ளைக்குப் பெண் கொடுப்பதாக இருந்தால் தாய் மாமனின் சம்மதம் இல்லாமல் பெண் கொடுக்க முடியாது. அந்த அளவுக்கு முதல் உரிமையும் முழு மரியாதையும் இருக்கும் உறவு தாய் மாமன் உறவுதான்.


அப்படிப்பட்ட என் தாய் மாமனுக்கு யாரும் பெண் தர மறுத்தார்கள். நாடகம், திரைத்துறை என்று அலைந்ததால் கூத்தாடி பிழைப்பு என்று எதிர்ப்பு இருந்தது. அவரோட அப்பா பெரிய மாயப்ப தேவர் மட்டும் மகன் திரைத்துறையில் வெற்றிபெறுவான் என்று அவர் திறமைமீது நம்பிக்கை வைத்திருந்தார். வீட்டுக்குத் தெரியாமல் காசு கொடுத்து அடிக்கடி லாரி ஏற்றி சென்னைக்கு அனுப்பி வைப்பார்.



பெண் கிடைக்காததால் என் அக்காவை அவருக்குக் கட்டிக்கொடுக்கப் பேச்சு நடந்தது. இந்த விஷயத்தில் என் அப்பா - அம்மாவுக்கு இடையே சண்டையே வந்தது. கடைசியில் என் அம்மா விரும்பியதுபோலவே திருச்சி ஹோலி கிராஸ் கல்லூரியில் பிஎஸ்சி படித்திருந்த என் அக்காவை என் தாய் மாமனுக்குக் கட்டிக்கொடுத்தனர். திருமணமாகி ஒரு வருடத்தில் முதல் படமான ’16 வயதினிலே’ வெளியானது.

‘அலைகள் ஓய்வதில்லை’ படத்தில்தான் நான் அவரிடம் உதவி இயக்குநராகச் சேர்ந்தேன். செட்டுக்குள் இருந்த திரைப் படத்தை ஊருக்குள் கொண்டுவந்த இயக்குநர் என்ற பெருமையைத் தாண்டி நான் அவரிடம் வியப்பது அவருடைய படத்தொகுப்பு அறிவு. அந்தத் தொழில் நுட்பத்தை அவரிடம் சரியாகக் கற்றுக் கொண்டாலே சிறந்த இயக்குநராகி விடலாம். படப்பிடிப்புத் தளத்தில் அவர் எடுக்கும் காட்சியைப் படத் தொகுப்பில் வேற மாதிரி மாற்றுவார். “ஆகா நல்லாயிருக்கே” என்று நாங்கள் ஆச்சரியப்பட்டால் மறுநாள் வேற மாதிரி மாற்றி வியக்க

தொடர்ச்சி 10ஆம் பக்கம்...)

சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416.754.7338 / 416.724.7480

3011 Markham Road, Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# நாம் அனைவரும் கோவிட்-19 தடுப்பூசியைப் பற்றி மேலும் அறிய விரும்புகின்றோம்

கோவிட்-19 தடுப்பூசி நடவடிக்கை





## நான் ஏன் தடுப்பூசி போட வேண்டும்?

இது கோவிட்-19 இலிருந்து பாதுகாக்கிறது மேலும் நீங்கள் நோய்வாய்ப்படுவதைத் தவிர்க்க உதவுகிறது. பலர் சிகிச்சைப் பெறாமல் குணமடைந்தாலும், சிலர் கோவிட்-19 ஆல் இறக்க நேரிடலாம் அல்லது இதய நோய் அல்லது நிமோனியா போன்ற நுரையீரல் பிரச்சினைகளுக்கு ஆளாக நேரிடலாம். நரம்பு மண்டலம் கூட பாதிக்கப்படலாம்

## நம்மைத் தொடர்ந்து பாதுகாத்துக் கொள்வோம்!

வரவிருக்கும் மாதங்களில், பெரும்பான்மையான மக்கள் தடுப்பூசி போட்டுக் கொள்ளாத வரையில், கோவிட்-19 நீடித்து இருக்கும்.




உங்கள் இடைவெளியை கடைபிடியுங்கள் | உங்கள் முகத்தை மறைக்கவும் | உங்கள் சட்டையின் கைகளில் இருமவும் | கைகளை கழுவவும்

Québec.ca/vaccinCOVID

1 877 644-4545

Votre gouvernement

Québec

20-279-31FA

# நாமும் நமது இல்லமும் 587

## ஒன்றாறியோவில் ஜூலை 16 இல் வியாபார நிலையங்கள் திறக்கப்படுகின்றன!



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

ஏறத்தாள 16 மாதங்களுக்குப் பின்னர் வியாபார நிலையங்களும் மற்றைய சேவை நிறுவனங்களும் மட்டுப்படுத்தப் பட்ட அளவில் திறக்கப்படுகின்றது. நிலைமைகள் சிறப்பாக இருப்பின் 21 நாட்களில் ஒன்றாறியோ வர்த்தகம் மற்றும் சேவை நிறுவனங்கள் முற்றாகத் திறக்கப்படலாம்?

தடுப்பூசி பெற்றவர்களின் எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்கக் கோவிட்-19இன் தொற்றிற்கு உள்ளாகுவோரின் எண்ணிக் கையும் குறைவதைக் காணலாம். கடந்த 16 மாதங்களாக வீட்டிற்குள்ளேயே இருந்த பலர் உள்ளூர் பிரயாணங்களை ஆரம்பித்துள்ளனர்.

ஆதன வியாபாரத்தில் ஏப்ரல், மே 2021 மாதங்களில் இறக்கம் ஏற்பட்டதைக் காணக்கூடியதாக இருந்தது. மக்கள் பிரயாணங்களைத் தொடங்குவதால் ஆதன வியாபாரம் மீண்டும் மந்தம் அடையும் என எதிர்பார்க்கலாம்.

ஆதன வாடகையின் நிலைமையில் ஆரோக்கியமான மாற்றத்தைக் காணக் கூடியதாக உள்ளது. எனினும் முற்றாக நிலைமை மாறவில்லை. ஆய்வாளர்களின் அறிக்கையின் பிரகாரம் இக்கோடை காலத்துக்குப் பின்னர் ஆதன வாடகை கோவிட்-19இற்கு முன்னர் இருந்த நிலைமையை எட்டலாம்.

அடுக்குமாடி மனைகளிலுள்ள சிறிய அலகுகள் (units) இலகுவாக விற்கப்படு கின்றன. எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு, புதிதாகக் கட்டப்பட இருக்கும் அடுக்கு மனை அலகுகளில் கனடியர்கள் முதலிடுவதைக் காணலாம்.

மற்றும் $1.5இலிருந்து $2.0 மில்லியன் பெறுமதியான அடுக்கு மனைகளும் இலகுவாக விற்கப்படுகின்றன. குறிப்பாக மனையிலிருந்து வெளியே பாவிக்கக்கூடிய (terrace) உள்ள அலகுகளை ஒய்வு பெற்ற பலர் விரும்புவதாகத் தெரிய வருகிறது. ஏற்கனவே வீடுகளில் இருந்தவர்கள் தமது வீடுகளை விற்று இவ்வாறான மனைகளை வாங்குகின்றர்.

கோவிட்-19இனால் தமது வீடுகளை விற்கும் திட்டத்தைப் பின்போட்டிருந்த பலர், இப்போது சினிமா தியேட்டர்கள், உணவகங்கள் மற்றும் களியாட்ட இடங்கள் திறக்கப்படுவதால் தமது வீடுகளை விற்பதுடன் புதிய மனைகளை வாங்குவதைக் காணலாம். தடுப்பூசி ஏற்றப்பட்டவர்களின் எண்ணிக்கையின் அதிகரிப்பும், ஒன்றாறியோ கோவிட்-19 இற்கு முன்னர் உள்ள நிலைமைக்குத் திரும்புவதும் ரொறொன்ரோவை அண்டிய இவ்வாறான அடுக்குமனை வியாபாரத்தை ஊக்குவிக்கலாம்.




வயதானவர்களும் இளைஞர்களும் ரொறொன்ரோவின் மத்தியப் பகுதிகளை ஏன் விரும்புகின்றனர்? முக்கியமாக பொழுது போக்குகள், விதவிதமான உணவகங்கள் மற்றும் களியாட்ட நிகழ்வு கள் இங்கேயே அதிகமாக கிடைக்கின்றன.

இந்த ஆண்டின் முதல் மாதங்களில் ஆதனம் வாங்குவதில் ஏற்பட்ட போட்டி நிலைமை இப்போது காணப்படுவதில்லை. பல ஆதனங்கள் எதிர்பார்த்த விலைகளில் விற்கப்படுவதில்லை. எனினும் ஆதன வியாபாரத்தில் இறக்கம் ஏற்பட்டாலும் விலையில் பெரிய இறக்கம் ஏற்படாது போலவே தோன்றுகிறது. இப்பொழுது ஒப்பீட்டளவில் அதிக ஆதனங்கள் சந்தைக்கு வந்தாலும் மிகவும் அதிகம் என்று கூறுவதற்கில்லை.


இன்றைய நிலைமையில் ஆதன வியாபாரத்தின் திசையை அறுதியாகக் கூறமுடியாமலே உள்ளது. பலகாரணிகள் முற்றாக அறியப்படாமலே உள்ளன. எது எவ்வாறாயினும் தாம் வாழ்வதற்காக வாங்கும் ஆதனம் நீண்ட காலத்தில் சிறப்பாகவே அமையும். ஆதன முதலீடு நீண்டகாலத்திற்குரியது.

பொதுவான காலங்களில் ரொறொன்ரோ பெரும் பாகத்திலும் ரொறொன்ரோவிலும் விலை அதிகரிப்பு அதிகமாகக் காணப்படும். கோவிட்-19இன் காலத்தில் நிலைமை மாறாக உள்ளது. ஒட்டாவா, நயாகரா, Barrie ஆகிய நகரங்களில் இக்காலகட்டத்தில் அதிக விலை அதிகரிப்பைக் காணக்கூடியதாக உள்ளது.

கோவிட்-19 காலங்களில் கிராமங்களை நோக்கிப் படையெடுத்தவர்கள் மீண்டும் நகரத்தை நோக்கி வரக் கூடிய சந்தர்ப்பங்களும் இருப்பதால், ஏற்கனவே இருந்த நிலையில் மாற்றம் ஏற்படலாம்.

நகரத்தில் கிடைக்கும் தொழில் வசதிகளை கிராமப்பகுதிகளில் பெறுவது இலகுவாக இருக்காது. எனினும் நிரந்தரமாக வீட்டிலிருந்து தொழில் புரியக்கூடிய வசதிகள் இருந்தால், ஒன்றாறியோவின் எந்தப் பகுதிக்கும் கனடியர்கள் செல்ல ஆயத்தமாக இருப்பதாக பல ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

CMHC அடமானக் கடன் பெறுவதில் நெகிழ்வான தன்மையை இந்த மாத (யூலை) ஆரம்பத்தில் ஏற்படுத்தியுள்ளது. தமது அடமான வியாபாரத்தில் ஏற்பட்ட மந்த நிலைமையை மட்டுப்படுத்தவே இந்த இலகுத்தன்மை ஏற்படுத்தியுள்ளது என்பது உண்மையே. முற்றாக ஒன்றாறியோ திறக்கப்பட்டால் நிலைமை எவ்வாறு இருக்கும் என்பதை ஆவலுடன் எதிர்பார்ப்போம்.




## தமிழ்...

08ஆம் பக்கத்தொடர்ச்சி

வைப்பார். ‘முதல் மரியாதை’ படத்தையே தன் படத் தொகுப்பு வித்தையால் நான்கு விதங்களாகப் பண்ணி வைத்திருந்தார்.

திரைத்துறை தவிர சமூகம், தமிழ் மக்கள், பண்பாடு என்ற மற்றைய தளங்களிலும் இயங்கியவர், குரல் கொடுத்தவர்.

திரைத்துறை, வாழ்க்கை இரண்டிலுமே அவருக்கு மண்வாசனையும் எதார்த்தமும் தான் பிடிக்கும். எவ்வளவு உயரத்துக்குப் போனாலும் பழசையும் பழகிய ஆட்களை யும் மறக்காதவர். வாகனம் இல்லை யென்றால் ஆட்டோவில் போவார், ஆட்டோ இல்லாட்டி நடந்துபோகக்கூடத் தயங்காதவர். தன்னை இளமையாகக் காட்டிக்கொள்வதற்காக ஜீன்ஸ் டிசர்ட் போடுகிறாரே தவிர மற்ற எல்லா விஷயங்களிலும் எளிமை மாறாதவர்.

‘கருத்தம்மா’ படத்தில் ‘காடு பொட்ட காடு’ என்ற பாடல் மூலம் பாடகராகவும் ஆன என் மாமா, அண்மைக் காலமாக திரை



யில் நடிகராகவும் அவதாரம் எடுத்து, ஆரம்பக்கால பால் பாண்டியை திரும்ப அழைத்து வருகிறார்.”

**வாழ்க்கை நமக்குப் பல பாடங்களை கற்றுத் தருகிறது. அதில் ஒன்றுதான் யார் யாரிடம் எப்படி பேசவேண்டும் எப்படி பழகவேண்டும் என்பது...!**

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம்-05.12.1949 மறைவு-08.07.2021

## திரு. சுந்தரம் இந்திரராஜா

விளம்பரம் பத்திரிகையின் எழுத்தாளர்களில் ஒருவரான திரு. சுந்தரம் இந்திரராஜா கடந்த ஜூலை 08, 2021 அன்று தனது 71ஆவது வயதில் இவ்வுலகை விட்டு நீங்கியதனையிட்டு எமது பத்திரிகையினதும், சக எழுத்தாளர்களினதும், வாசகர்களினதும் சார்பாக அஞ்சலியை தெரிவித்துக்கொள்கின்றோம்.

இவரின் ஆத்மா இறைவனுடன் ஒன்றிணைய வேண்டுகின்றோம்.



# போட்டோவின் கதை




கிரேக்க மொழியில் போட்டோ என்பதற்கு தமிழில் ஒளி என்று பொருள். நமது வீட்டில் நடந்த ஒரு கொண்டாட்டத்தினை பல ஆண்டுகள் கழித்து, மீண்டும் அதனைப் பார்த்து மகிழ்வதற்கும் நாங்கள் கலந்து கொள்ளாத ஒரு கொண்டாட்டத் தில் கலந்து கொண்டோரையும் நிகழ்ந் தவையையும் நம் கண்முன் கொண்டு வந்து காட்டுவது புகைப்படங்களே. நமது குழந்தைப் பருவம், வாலிபப் பருவம், திருமணம் உள்பட பல மறக்க முடியாத காலக்கட்டங்களை திரும்பிப் பார்க்க வைக்க உதவுகிறது. நமது பழைய புகைப் படங்களை பார்க்கும்போது நமது மூளை அந்த இளமைக் காலத்திற்கு நம்மை அழைத்துச் செல்கிறது. இளமையில் நாம் இப்படி இருந்தோம். இன்றைக்கு எப்படி முகம், உடல் மாறிவிட்டது என்பதை ஒப்பிட்டுப் பார்க்கப் புகைப்படங்கள் உதவுகின்றன. நமது முன்னோர்களின் புகைப்படங்கள் இருந்தால் அவர்கள் எப்படி இருந்தனர், எப்படி வாழ்ந்தனர் என்பதையும் தெரிந்துகொள்ள முடிகிறது.

சுந்தரம் இந்திரராஜா அவர்களின் நினைவாக இக்கட்டுரை வெளியிடப்படுகிறது.

உலக வரலாற்றை மாற்றும் மிகப்பெரிய சக்தி புகைப்படத்திற்கு உண்டு. புகைப் படம் ஒவ்வொருவரின் வாழ்க்கையோடு ஒன்றிணைந்துள்ளது. வரலாற்று நிகழ்வு கள், இன்பம், துன்பம், பொதுக்கூட்டம், தலைவர்கள், அறிவியல் கண்டுபிடிப்புகள் என அனைத்தையும் நம் கண்முன் கொண்டுவந்து காட்டுகிறது. ஒரு தலை முறையின் சாதனைகளை அடுத்த தலை முறைக்கு எடுத்துக்காட்டும் ஒரு வழி காட்டியாகப் புகைப்படம் விளங்குகிறது. ஓவியம், இசை, இலக்கியம் உள்ளிட்ட எந்தக் கலைகளுக்கும் இல்லாத சிறப்பு இந்தக் கமராவுக்கும் (Camera), அது உருவாக்கிய புகைப்படத்துக்கும் மட்டுமே இருக்கிறது. கடந்த காலத்தின் அரசியல், வரலாறு, போர் மற்றும் புரட்சி, அவை ஏற்படுத்திய அழிவுகள், விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் போன்றவற்றை உண்மை யின் சான்றாகப் படம்பிடித்து நம் கண்முன்னே நிறுத்துகிறது. புகைப்படம் கண்டுபிடிக்கப்பட்டு 179 ஆண்டுகள் ஆகி விட்ட இந்தக் குறுகிய காலத்திலேயே, அனைத்து மக்களையும் அது கவர்ந்து வைத்திருப்பதற்குக் காரணம்... எவரும் அதை எளிமை யாகப் புரிந்துகொள்ளும் படி இருப்பது தான். நூறு பக்கங்கள் எழுத வேண்டிய ஒரு விடயத்தைக்கூட ஒரு புகைப்படம் விளக்கிவிடும்.

கமராவின் மூலம் எடுக்கப்பட்ட புகைப் படங்கள் உலக வரலாற்றைக்கூட மாற்றுவ தாக அமைந்துள்ளது. போர் உச்சத்தில் இருந்த காலகட்டமான 1972 ஜூன் 9ஆம் நாள் தெற்கு வியட்நாம் போட்ட நாப்பாம் குண்டினால் தாக்குதலுக்குள்ளான இந்தச் சிறுமி, ஓடி வரும் படம் உலக நாடுகள் மொத்தத்தையும் அப்போது அசைத்துப் பார்த்தது. சிறுமியின் புகைப்படம் வியட்நாம் போரை நிறுத்தக் காரணமாக அமைந்தது.



1993ஆம் ஆண்டில் எலும்பும் தோலுமாய் சோர்ந்து இருந்த சிறுமியை உண்பதற்கு காத்திருந்த கழுகுடன் எடுக்கப்பட்ட புகைப்படம் சூடானில் நிலவிய உணவுப் பஞ்சத்தை எடுத்துரைத்தது. 2009ஆம் ஆண்டில் தலைவர் பிரபாகரனின் இளைய மகன் பாலச் சந்திரன் மிகக் கொடூரமான முறையில் கொல்லப்பட்டது குறித்து வெளியான புகைப்படம் அன்றைய இலங்கை அரசின் இனச்சுத்திகரிப்பை உலகிற்குக் காட்டியது.

2015 செப்ரெம்பர் 4ஆம் திகதி துருக்கி கடற்கரையில் அய்லன் குர்தி என்ற மூன்று வயது சிறுவனின் உடல் கண்டெடுக்கப்பட்ட புகைப்படம் உலகையே அதிர்ச்சி அடைய வைத்தது. சிரியாவில் நடைபெற்று வரும் உள்நாட்டுப் போர் காரணமாக அந்நாட்டு மக்கள் துருக்கி வழியாக அண்டை நாடான ஐரோப்பிய நாடுகளுக்கு அகதிகளாக இடம் பெயர் வால் அடையும் துன்பங்களை எடுத்து ரைத்தது. அறிவியலின் சாதனைகளை கண்டுணரப் பல புகைப்படங்கள் நமக்கு உதவுகின்றன. நிலவில் மனிதனின் காலடியை காட்டும் புகைப்படம் விண் வெளியில் மனிதன் சாதித்த சாதனையை விளக்குகிறது. செவ்வாய் கிரகத்தின் புகைப் படங்கள் மனிதனின் காலடிபடாத இடத்தைப்பற்றி அறிந்துகொள்ள உதவு கிறது. செவ்வாய் கிரகத்தில் ஆறுகள் ஓடினவா? நீர் உள்ளதா போன்ற அரிய உண்மைகளை கண்டறிவதற்குப் புகைப் படங்களே உதவுகின்றன. புகைப்படத்திற்கு அடிப்படையாக இருப்பது கமராவே ஆகும். கமராவைக் கண்டுபிடித்ததற்குப் பின்பு உலகில் நடந்த கண்டுபிடிப்புகளைப் பட மாக்கப்பட்ட பல செய்திகளை, புகைப் படங்களைப் பற்றித் தினமும் அறிந்த வண்ணம் இருக்கிறோம். கமராவை ஆக்கப் பணிகளுக்கும், அறிவியல் வளர்ச்சிக்கும், சமூக மாற்றத்திற்கும் பயன் படும் வகையில் பயன்படுத்த வேண்டும். அதன்மூலம் பல அரிய தகவல்களை மக்களுக்குக் கொண்டுசேர்க்க வேண்டும்.

புகைப்படம் எடுத்தால் ஆயுள் குறைந்து விடும் என்கிற மூட நம்பிக்கை தற்போது போய்விட்டது. கமரா வைத்திருப்பது என்பது ஒரு அந்தஸ்து, வசதியைக் காட்டுவது போன்ற செயலும் தற்போது போய்விட்டது. கமரா வாங்க வேண்டும்

தொடர்ச்சி 12ஆம் பக்கம்...)

# போட்டோவின்...

11ஆம் பக்கத்தொடர்ச்சி

என்கிற கனவு தற்போது சாதாரண மக்களிடம்கூட நிறைவேறி விட்டது. கைப் பேசி போன் (Cell Phone), ஸ்மார்ட் போன் (Smart phone) வந்தபிறகு, இன்றைக்கு ஒவ்வொருவரின் பொக்கெற்றிலும் அவரவர் வசதிக்கேற்ப கமரா செல்போன் உள்ளது. தன்னைத்தானே பலர் புகைப்படம் (Selfi) எடுத்துக்கொண்டு பார்த்து மகிழ்கின்றனர். ஒவ்வொருவருக்கும் மகிழ்ச்சியை கொடுக் கும் ஒரு கருவியாக கமரா விளங்குகிறது. இந்தக் கமராவின் கண்டுபிடிப்பு அறிவியல் வரலாற்றில் ஒரு சாதனையாகும்.

ஓர் எளிய வகையான கமரா என்பது கி.மு. 5ஆம் நூற்றாண்டிலேயே கண்டு பிடிக்கப்பட்டது. அதனை ஊசித் துளைக் கமரா (Pinhole) என்று அழைக்கின்றனர். இது அனைவரும் விளையாட்டாக, பொழுது போக்கிற்காக செய்து மகிழலாம். ஒளி ஓர் ஊசித் துளை மூலம் ஓர் இருண்ட பெட்டியில் நுழைகிறது. துளையின் எதிர் சுவரில் அல்லது திரையில் ஒரு தலைகீழ் படம் உருவாகிறது என்பதை சீன தத்துவ ஞானி மோ ரி (Mo Ti) என்பவர் கண்டறிந்தார். இதன் அடிப்படையில் முதன்முதலாக ஒரு படத்தை வரைந்து எடுத்தார். நுண்துளைக் கமராவே இன்றைய புகைப்படம் எடுக்கும் கமராவின் முன்னோடியாகும். இந்தக் கமராவை இருள்படப் பெட்டி (Camera Obscura) என்று அழைத்தனர்.

கமராவின் அடிப்படை தத்துவத்தை கி.மு. 3ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தத்துவஞானி அரிஸ்ரோட்டில் எழுதி வைத்துள்ளார். கி.மு. 330ஆம் ஆண்டில் நடந்த ஒரு பகுதி சூரிய கிரகணத்தை அவர் கண்டார். ஒரு மரத்தின் இலையின் இடையே உள்ள துவாரத்தின் வழியாக தரையில் விழுந்த நிழலின் மூலம் கண்டார். இவர் கண்டு பிடித்த தலைகீழ் கோட்பாடே புகைப் படத்திற்கு அடிப்படையாக அமைந்துள்ளது.



